<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 260/2015 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | ராம்குமார் | நாள் | 15.11.2023 |
| தகப்பனார் பெயர் | சுதர்சனம் | | |

<u>1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:-</u>

1) தாவா சொத்து புக்கம் பட்டி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் ஆண்டிமுத்துக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆண்டிமுத்துக்கவுண்டரின் மனைவி பெயர் சின்னம்மாள் என்றாலும், மகன் பெயர் மல்லையன் என்றாலும், மகள் பெயர் கமலா என்றாலும், மற்றொரு மகள் பெயர் பரஞ்ஜோதி என்றாலும் சரிதான்.

2) மேற்படி ஆண்டிமுத்துக்கவுண்டர் தாவா சொத்தின் பெயரில் யாதொரு வில்லங்கமும் ஏற்படுத்தாமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவரது இறப்பிற்கு பின் ஆண்டிமுத்துக்கவுண்டரின் பெயரிலிருந்த சொத்துக்கள் அனைத்தும் அவரது மனைவி சின்னம்மாள் பெயருக்கு நிலவரி திட்டத்தின் கீழ் பெயர்மாற்றம் ஆகி வந்துவிட்டது என்றால் சரிதான்.

3) தற்போது இவ்வழக்கிலுள்ள சொத்தானது புக்கம்பட்டி கிராமம் சர்வே எண்.93/1, அதில் பு.ஏ.3.02 ஏக்கர் நிலம் என்றால், சரிதான். மேற்படி ஆண்டிமுத்துக்கவுண்டர் சின்னம்மாள் தம்பதியரின் மகனான மல்லையன் என்பவர் வாதி காலாவை வாரிசாக விட்டுவிட்டு கடந்த 01.02.1978ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

4) மேற்படி ஆண்டிமுத்துக்கவுண்டரின் மனைவி சின்னம்மாள் தனக்கு பாத்தியப்பட்ட 3 ஏக்கர் நிலத்தையும் 3 ஆக பாகம் பிரித்து 1 ஏக்கர் நிலத்தை வாதிக்கும், 1 ஏக்கர் நிலத்தை 1ம் பிரதிவாதிக்கும், 1 ஏக்கர் நிலத்தை 2ம் பிரதிவாதிக்கும் சமமாக தானா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான்.

5) மேற்படி சின்னம்மாள் கடந்த 04.04.1983ம் தேதியில் சர்வே எண்.93/1, ல் உள்ள 1

ஏக்கர் நிலத்தை 2ம் பிரதிவாதி பரஞ்ஜோதி என்பவருக்கும், கடந்த 10.04.1990ம் தேதியில் 1 ஏக்கர் நிலத்தை 1ம் பிரதிவாதி கமலாவிற்கும், கடந்த 17.03.1994ம் தேதியில் மீதமுள்ள 1 ஏக்கர் நிலத்தை வாதி கலா என்பருக்கும் தானா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியுள்ளார் என்றால் சரிதான்.

6) வாதியும், பிரதிவாதிகளும் மேற்படி தங்களது பெயருக்கு தானா செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பெற்ற தேதியிலிருந்து அவரவர்கள் பெயருக்கு வருவாய் ஆவணங்கள் மாற்றப்பெற்று அவரவர்கள் சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகின்றனர் என்றால் சரிதான்.

7) மேற்படி 1ம் பிரதிவாதி தனக்கு தானா செட்டில்மெண்ட் ஆவணத்தில் பாத்தியப்பட்ட 1 ஏக்கர் நிலத்தில் கடந்த 1990ம் வருடத்தில் நல்லதம்பி என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி நல்லதம்பி கிரையம் பெற்ற தேதியிலிருந்து அவர்தான் மேற்படி நிலத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான்.

8) மேற்படி 2ம் பிரதிவாதி தனக்கு தானா செட்டில்மெண்ட் ஆவணத்தில் பாத்தியப்பட்ட 1 ஏக்கர் நிலத்தில் கடந்த 1983ம் வருடத்தில் ராஜா என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ராஜா கிரையம் பெற்ற தேதியிலிருந்து அவர்தான் மேற்படி நிலத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான்.

9) வாதி கலா தனக்கு தானா செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி பாத்தியப்பட்ட சொத்தை யாருக்கேனும் விற்பனை செய்துள்ளாரா என்றால் இல்லை. தற்போது வரை அவர்தான் மேற்படி சொத்தை அனுபவித்து வருகிறார்.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.